People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.pwtn.org

**09.02.2010**

**மாண்புமிகு. தமிழக முதல்வர் அவர்கள்,**
தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.

பேரன்புடையீர்

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கங்கள்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மனித உரிமை செயல்பாட்டுத் தளத்தில் இயங்கி வருகிறது. கடந்த ஆண்டு முதல் சித்ரவதைத் தடுப்பிற்கான தேசியத் திட்டத்தில் இந்தியா முழுவதிலுமுள்ள 10 மாநிலங்களிலும் செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும், மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**இவ்வாரத்தில் நடந்த மனித உரிமை மீறல்கள்**

| | | |
|---|---|---|
| 1. | என்கவுண்டர் | - |
| 2. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | 2 |
| 3. | பெண்கள் மீதான வன்முறை | 31 |
| 4. | காவல் நிலையச் சித்திரவதை | 14 |
| 5. | வகுப்பறை வன்முறை | 3 |
| 6. | தலித்துகள் மீதான வன்முறை | 7 |
| 7. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | 10 |
| 8. | மருத்துவர்கள் அலட்சியம் | 2 |
| 9. | குழந்தை தொழிலாளர் மீட்பு/ வன்முறை | 3 |
| 10. | மீனவர்கள் மீது தாக்குதல் | 1 |
| 11. | கந்து வட்டிக் கொடுமை | 2 |
| 12. | ரேசன் அரிசி கடத்தல் | 1 |
| 13. | மணல் கொள்ளை | 6 |
| 14. | பொதுவானவை | 2 |
| | மொத்தம் | 86 |

தாங்கள் இச்சம்பங்களில் உடனடியாக தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்
(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்
1. அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும்
2. அனைத்து மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கும்
3. அனைத்து அரசியல் கட்சிகளுக்கும்



மக்கள் கண்காணிப்பகம்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு-05
## 01. 02.2010 முதல் 06.02.2010 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 262. | 1.2.2010 | **சேலம் மாவட்டம்:** மனித உரிமை ஆர்வலர் பியூஸ் சேத்தியா மனுஷ் துண்டுப் பிரசுரம் வழங்க முயன்றபோது, காவலர்களால் தேசத்துரோக குற்றச்சாற்றில் கைது. | காவல் நிலைய சித்திரவதை | தமிழ் ஓசை (29.1.10) |
| 263. | 1.2.2010 | **சென்னை மாவட்டம்:** சென்னை கோட்டூர்புரம் வீட்டு வசதி வாரியக் குடியிருப்புப் பகுதியில் வசித்து வரும் இரத்தினராஜ் மகள் ஜான்சி(20) கணவர் செல்வின்ஞானராஜ்(29), திருமணம் ஆன 5 நாட்களில் விரும்பிய வாழ்க்கை கிடைக்கவில்லை என ஜான்சி தற்கொலை. | பெண்கள் மீதான சித்திரவதை | தமிழ் ஓசை (31.1.10) |
| 264. | 1.2.2010 | **மதுரை மாவட்டம்:** சோழவந்தான், குருவித்துறை வைகை ஆற்று பகுதியில் இருந்து சித்தாதிபுரம் ரோட்டில் மணல் அள்ளி சென்ற லாரி பறிமுதல். | மணல் கடத்தல் | தினமலர் |
| 265. | 1.2.2010 | **கடலூர் மாவட்டம்:** புதுச்சேரி தட்டாஞ்சாவடியை சேர்ந்த சுசில்குமார். வழக்கு தொடர்பாக சிறையில் அடைக்கப்பட்ட சுசில்குமார் மரணம். | சிறைச்சாலை வன்முறை | தினகரன் |
| 266. | 1.2.2010 | **விழுப்புரம் மாவட்டம்:** விழுப்புரம் அருகே சிறுவந்தாடு லட்சுமி நகர் அருகே தனியார் ஸ்பின்னிங் மில் உள்ளது. மில்லை சுற்றி மின்வேலி அமைக்க மக்கள் எதிர்ப்பு தெரிவித்தும் நிர்வாகம் பொருட்படுத்ததால் சுவேதா(3) குருநாதன்(7) இரு குழந்தைகள் மின் வேலியில் சிக்கி படுகாயம். | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 267. | 1.2.2010 | **திருவள்ளுவர் மாவட்டம்:** திருத்தணி தாலுகா பகுதியில் ரேசன் கடை விற்பனையாளர்களின் மாதாந்திர கூட்டம் கேசிசி வங்கி வளாகத்தில் நடந்தது. லஞ்ச ஒழிப்புதுறை போலீசாரின் திடீர் சோதனையில் கணக்கில் வராத பணம் ரூ. 8,500 பறிமுதல் | லஞ்சம் | தினகரன் |
| 268. | 1.2.2010 | **இராமநாதபுரம் மாவட்டம்:** இராமேஷ்வர மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தி துப்பாக்கி முனையில் வலைகளை அறுத்து எறிந்ததாக புகார். | மீனவர்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 269. | 1.2.2010 | **விழுப்புரம் மாவட்டம்:** திண்டிவனம் வட்டம் நெடி கிராமத்தில் அய்யனார் ஆலயத்தில் தலித் மக்கள் வழிபட அனுமதி மறுப்பு. இங்கு பொங்கல் வைத்து வழிபட முற்பட்டவர்களை ஆதிக்க சமூகத்தை சேர்ந்தவர்கள் அடித்து விரட்டியுள்ளனர். | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | காவல்துறையும் வருவாய் துறையும் நடவடிக்கை எடுக்க மறுப்பு. | | |
| 270. | 1.2.2010 | **வேலூர் மாவட்டம்:** திருப்பத்தூர் தாலுகா சேலம் ரோட்டைச் சேர்ந்த காளிங்கன் மனைவி உஷா திருப்பத்தூர் காவல்நிலையக் காவலர்களால் அடித்து சித்திரவதை. | காவல் நிலைய சித்திரவதை | பாஸ்கரன் |
| 271. | 2.2.2010 | **கன்னியாகுமரி மாவட்டம்:** புதுக்கடை ஹெலன் நகர் சர்ச் வலாகத்தில் பொது நிகழ்ச்சி நடந்தது. இதில் கலந்து கொண்ட பொதுமக்களை புதுக்கடை காவலர்கள் எவ்விதக் காரணமுமின்றி தடியடி நடத்திச் சித்திரவதை. | காவல் நிலைய சித்திரவதை | Fr.Arulraj |
| 272. | 2.2.2010 | **விருதுநகர் மாவட்டம்:** சாத்தூரைச் சேர்ந்த தனலெட்சுமி. கணவரால் தனலெட்சுமி தொடர்ந்து சித்திரவதை. கணவர் மற்றும் அவரது தாயாரும் காவல்துறையும் தனலெட்சுமிக்கு எதிராக செயல்படுவதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & காவல் நிலைய சித்திரவதை | முனிராஜ் |
| 273. | 2.2.2010 | **மதுரை மாவட்டம்:** முனிச்சாலை பகுதியில் வசிப்பவர் அகிலா(15), பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு படிக்கும் அகிலாவை ஆசிரியர் அடித்ததால் மாணவி மாயம். | வகுப்பறை வன்முறை | தினமலர் |
| 274. | 2.2.2010 | **விழுப்புரம் மாவட்டம்:** கள்ளக்குறிச்சி புதுவீட்டுச் சந்து தெருவைச் சேர்ந்தவர் பக்தவச்சலம்(40), இவரது வீட்டிற்கு மின் இணைப்பு வழங்க மின்வாரிய வணிக ஆய்வாளர் கோவிந்தராஜ்(42), 2,500 லஞ்சம் கேட்டதாக புகார். | லஞ்சம் | தினமலர் |
| 275. | 2.2.2010 | **நாகை மாவட்டம்:** நாகை புதிய பஸ் ஸ்டாண்ட் அருகேயுள்ள வணிகவளாகம் பகுதியில் திலகா(4), என்ற சிறுமி பெற்றோரால் கைவிடப்பட்டு நின்ற போது திலகாவை சைல்டு லைன் அமைப்பினர் பாதுகாத்து வருகின்றனர். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 276. | 2.2.2010 | **விருதுநகர் மாவட்டம்:** விருதுநகரில் ஒரு தனியார் கல்லூரியில் பேராசிரியையாக இருப்பவர் கவிதா, பி.எச்.டி. படிக்க விரும்பி ராஜாராம்பாண்டியனிடம் படிக்க வந்த போது செக்ஸ் தொல்லை கொடுத்தாக கவிதா புகார். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினத்தந்தி |
| 277. | 2.2.2010 | **தேனி மாவட்டம்:** ஊஞ்சாம்பட்டி இந்திரா காலனி தலித் மக்கள் தாங்கள் வசிக்கும் பகுதிக்கு செல்லும் பாதையை ஆதிக்கசாதியினர் அடைப்பு. பாதை அமைத்துதருமாறு அதிகாரிகளிடம் மனு. | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 278. | 2.2.2010 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி தாலுகாவில் உள்ள மாதரை கிராமத்தில் இலவச எரிவாயு அடுப்புகள் வழங்குவதற்கு ரூபாய் 800 முதல் 1000வரை லஞ்சம் | லஞ்சம் | தீக்கதிர் |



மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | வாங்கியும் அடுப்பு கொடுக்கப்படவில்லை என பொது மக்கள் புகார். | | |
| 279. | 2.2.2010 | **நீலகிரி மாவட்டம்:** நீலகிரி பழங்குடியின மக்களுக்கு அளிக்கப்பட்ட நிலங்களை வனத்துறையினர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகவும். பலமுறை மனு கொடுத்தும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என பொதுமக்கள் புகார். | தலித்துகள் பழங்குடியின மக்கள் மீதான வன்முறை | ஜனசக்தி |
| 280. | 2.2.2010 | **தேனி மாவட்டம்:** கம்பம் விவேகானந்தர் தெருவைச் சேர்ந்தவர் முருகன்(33) மனைவி ஜோதி(29) குடும்பத்தகராறில் ஆத்திரமடைந்த முருகன் ஜோதியை உலக்கையால் தாக்கியதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்முரசு |
| 281. | 3.2.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை பெருங்குடியைச் சேர்ந்த கருப்பு மனைவி குருவம்மாள், கணவர் கூடுதல் வரதட்சனைக் கேட்டு துன்புறுத்துவதாகவும், இருளாயி என்ற பெண்ணை மறுதிருமணம் செய்ததாகவும் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 282. | 3.2.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை கோ.புதூர் லூர்து நகர் முதல் தெரு அஜய்திருநெல்லைசெல்வம் மனைவி மகாராணி(28), கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதால் மகாராணி தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 283. | 3.2.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை சோலை அழகுபுரத்தைச் சேர்ந்த கார்த்திகேயன்(28), குற்றவாளியான இவரை கோர்ட் ரிமாண்ட் செய்தும் போலீசார் சிறையில் அடைக்காமல் அடித்துத் சித்திரவதை. கார்த்திகேயன் நீதிபதியிடம் புகார். | காவல்நிலைய வன்முறை | தமிழ்சுடர் |
| 284. | 3.2.2010 | **சிவகங்கை மாவட்டம்:** மானாமதுரை தாலுகாவில் பாசனத்திற்கு வைகை தண்ணீர் திறந்து விடக்கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம். போலீஸ் தடியடி. | காவல்நிலைய வன்முறை | தமிழ்சுடர் |
| 285. | 3.2.2010 | **நாகை மாவட்டம்:** திருக்கண்ணங்குடி கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவர்கள் குடிநீர் தொட்டி சுத்தம் செய்யப்படாமல் அழுக்குடன் இருந்த தண்ணீரைக் குடித்த மாணவ, மாணவிகள் 10 பேர் மயங்கி விழுந்தனர். | வகுப்பறை வன்முறை | தமிழ்சுடர் |
| 286. | 3.2.2010 | **மதுரை மாவட்டம்:** மாட்டுத்தாவணி பஸ் நிலையம் எதிரே ரோட்டின் இருபுறமும் கடைகள் வைத்துக் கொள்ளவும், ஆம்னி பஸ்களை நிறுத்திக் கொள்ளவும் ரவுடிகளும் போலீசும் அடுத்தடுத்து வசூல் வேட்டை நடத்தி வருவதாக புகார். | லஞ்சம் | தினகரன் |
| 287. | 3.2.2010 | **கன்னியாகுமரி மாவட்டம்:** மார்த்தாண்டம் அடுத்த சாங்கை பகுதியில் | மணல் கடத்தல் | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | மணல் குடோனில் இருந்து கேரளாவுக்கு மணல் ஏற்றி சென்ற 2 லாரிகளை போலீசார் தடுத்தபோது போலீசார் மீது லாரி ஏற்றிக் கொல்ல முயற்சி. | | |
| 288. | 3.2.2010 | **ஈரோடு மாவட்டம்:** அரசு மதுபான டாஸ்மாக் பார் டெண்டர் படிவம் வாங்குவதில், தி.மு.க., வினரிடையே எற்பட்ட மோதலில், போலீசார் தடியடி. | காவல் நிலைய வன்முறை | தினமலர் |
| 289. | 3.2.2010 | **சேலம் மாவட்டம்:** சேலம் லைன்மேட்டில் தங்கி சேலம் மாநகரில் போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு பணியில் ஜெயபாரதி பணியாற்றி வருகிறார். பெற்றோர் எற்பாடு செய்த திருமணத்தில் விருப்பம் இல்லாததால் தற்கொலைக்கு முயற்சி. | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 290. | 3.2.2010 | **தூத்துக்குடி மாவட்டம்:** ஒட்டப்பிடாரம் அரசு மருத்துவமனையில் அடிப்படை வசதிகள் இல்லாததோடு இரவு நேரத்தில் மருத்துவர்கள் பணியில் இல்லாததால் தூத்துக்குடிக்கு நோயாளிகளை கொண்டு செல்ல வேண்டியுள்ளதாக புகார். | மருத்துவர் அலட்சியம் | தீக்கதிர் |
| 291. | 3.2.2010 | **திருச்சி மாவட்டம்:** மண்ணச்சநல்லூர் தாலுகாவிலுள்ள சிஆர் பாளையத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் 500பேர் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு ஒதுக்கி தரப்பட்ட சுடுகாட்டிற்கான இடத்தை ஆதிக்கசமூகத்தினர் பிளாட் போட்டு விற்க முயற்சிப்பதாக புகார். | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 292. | 3.2.2010 | **வேலூர் மாவட்டம்:** வாணியம்பாடி நியுடவுன் பகுதியில் உள்ள ஆதிதிராவிட கல்லூரி விடுதியில் மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவு சரியான முறையில் தயாரிக்காமல், அழுகிய காய்கறிகள் மூலம் தயாரிக்கப்படுவதாக மாணவர்கள் புகார். | தலித்துகள் மீதான வகுப்பறை வன்முறை | தீக்கதிர் |
| 293. | 4.2.2010 | **மதுரை மாவட்டம்:** சாத்தையாறு அணை பகுதியில் வசிக்கும் சின்னவீரன் தாட்கோ திட்டத்தில் வழங்கப்பட்ட நிலத்திற்கு இலவச மின்சாரம் கேட்டு விண்ணப்பித்தார். சமயநல்லூர் தலைமை செயற்பொறியாளர் கென்னடி 2000/– ரூபாய் லஞ்சம் கேட்டதாக புகார். | லஞ்சம் | தினமலர் |
| 294. | 4.2.2010 | **திண்டுக்கல் மாவட்டம்:** சென்னை புதுப்பேட்டையை சேர்ந்தவர் பஷீர்அகமது சென்னையில் இருந்து காரில் வந்த போது திண்டுக்கல் அருகே செக்போஸ்ட் இன்ஸ்பெக்டர் ஜனார்த்தனர் ரூ.15 லட்சம் லஞ்சம் கேட்டதாகவும் தரமறுத்தால் பொய் வழக்கு போடுவதாக மிரட்டியதாக புகார். | காவல்துறை வன்முறை | தினமலர் |
| 295. | 4.2.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை மாநகர் ஆயுதப்படை பிரிவில் போலீசாராக | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | பணிபுரிந்து வருபவர் கலைவாணன்(35) மனைவி கங்காதேவி(22) கணவர் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்துவதாக கங்காதேவி புகார். | | |
| 296. | 4.2.2010 | **சென்னை மாவட்டம்:** வண்ணாரப்பேட்டையைச் சேர்ந்த முனியப்பன் (25), முருகன்(37), சக்தி(33) மூவரையும் தொலைபேசி கேபிள்களை திருடியதாக கைது. இத்திருட்டு வழக்கில் அரசு பொது மருத்துவமனை காவல் நிலைய எஸ்.ஐ., சிட்டிபாபுக்கு தொடர்பு இருப்பதாக புகார். | காவல் நிலைய சித்திரவதை | தினமலர் |
| 297. | 4.2.2010 | **திருச்சி மாவட்டம்:** துவரங்குறிச்சி ஆரியக்கோன்பட்டியை சேர்ந்த பழனியப்பன் (42), கோவில் பூஜாரி இவரை தாக்கி வலம்புரி சங்கை கடத்திய ஒரு கும்பலை பொதுமக்கள் பிடித்து போலீசில் ஒப்படைத்தனர். விசாரணையில் சங்கை திருடியது திருச்சி மாநகர ஆயுதப்படை போலீசார் என தெரிந்தது. | காவல் நிலையை சித்திரவதை | தினமலர் |
| 298. | 4.2.2010 | **சென்னை மாவட்டம்:** அயனாவரம் புதுநகர் குறுக்கு தெருவை சேர்ந்த முரளி மனைவி செல்வி(41), தனது மனைவி, மகள் சரண்யா இருவரையும் சாந்தகுமார் கடத்தி சென்றதாக முரளி புகார். விசாரணையில் சாந்தகுமார் இதுபோல் 4பெண்களை திருமணம் செய்து ஏமாற்றியுள்ளதாக தகவல். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 299. | 4.2.2010 | **விழுப்புரம் மாவட்டம்:** சங்கராபுரம் அடுத்த காட்டு வனஞ்சூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 150 மாணவ, மாணவியர் படிக்கின்றனர். இவர்களுக்கு சத்துணவு சரியாக வழங்கப்படவில்லை என புகார். | வகுப்பறை வன்முறை | தினமலர் |
| 300. | 4.2.2010 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** செங்கல்பட்டில் உள்ள இலங்கை அகதிகளுக்கான சிறப்பு முகாமில் இருந்த அகதிகள் மீது போலீசார் தாக்கியதில் 6 அகதிகள் பலத்த காயமடைந்ததாக புகார். | காவல் நிலைய வன்முறை | தினகரன் |
| 301. | 4.2.2010 | **தேனி மாவட்டம்:** போடி அருகேயுள்ள மார்க்கையன் கோட்டையை சேர்ந்த செல்வம்(33) மனைவி கருப்பாயி(28), கணவர் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்துவதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்முரசு |
| 302. | 4.2.2010 | **தேனி மாவட்டம்:** ஆண்டிபட்டி அருகேயுள்ள தர்மத்துபட்டி கிழக்கு தெருவை சேர்ந்த வெள்ளைச்சாமி மகள் ராஜேஸ்வரி(17), பிளஸ்2 படித்து வந்தார். தனது மகளை தனது தங்கை மகன் செல்வம் கடத்தி சென்றதாக வெள்ளைச்சாமி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்முரசு |
| 303. | 4.2.2010 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசியில் அருகே வைப்பாற்றில் இருந்து மணல் கடத்தும் | மணல் கடத்தல் | தமிழ்முரசு |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | தகவல் அறிந்து சென்ற வருவாய்த்துறை ஊழியர்கள் லாரியை மறித்தபோது லாரியை நிறுத்துவது போல் போக்குகாட்டி கொல்ல முயன்றதாக டிரைவர் ராஜா கைது. | | |
| 304. | 5.2.2010 | **விழுப்புரம் மாவட்டம்:** செஞ்சியில் உள்ள கோவில் வழிபாடு, மற்றும் நிலம் தொடர்பாக இந்து மதத்தினருக்கும், கிருஸ்தவ மதத்தினருக்கும் மோதல். காவல்துறை மெத்தன நடவடிக்கை. | மதக் கலவரம் | Hindu |
| 305. | 5.2.2010 | **இராமநாதபுரம் மாவட்டம்:** பரமக்குடி எமனேஸ்வரம் புதுநகரை சேர்ந்த பூமிநாதன் மனைவி மகாலட்சுமி(33) தனது வீட்டை ஆக்கிரமித்து கட்டியது தொடர்பாக அமைச்சர் தங்கவேலுவின் தம்பி கார்மேகம், என்பவர் 6 லட்சம் கேட்டு மிரட்டி மானபங்கம் செய்தாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 306. | 5.2.2010 | **திண்டுக்கல் மாவட்டம்:** வேடசந்தூர் அருகேயுள்ள உசிலம்பட்டியை சேர்ந்த கர்ணன் மனைவி சாந்தி(25), இவர் 2 பிரசவத்தின் போது பெண் குழந்தை பிறந்தது. இவரின் சம்மதம் இல்லாமல் திண்டுக்கல் மருத்துவமனை மருத்துவர்கள் குடும்ப கட்டுப்பாடு ஆப்பரேஷன் செய்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 307. | 5.2.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை ரயில்வே ஸ்டேஷனில் ஆண் குழந்தை கண்டெடுக்கப்பட்ட எல்லீஸ்நகர் கென்னட் மருத்துவமனை பராமரிப்பில் உள்ளது. | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 308. | 5.2.2010 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலத்தைச் சேர்ந்த பாலாஜி மனைவி சுந்தரி. கணவன் மனைவி குடும்ப தகராறு. கணவருக்கு மறுதிருமணம் நடந்த தகவலை அறிந்து கணவருடன் சேர்த்து வைக்க கோரி கணவர் வீட்டு முன் சுந்தரி தர்ணா. | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 309. | 5.2.2010 | **திருச்சி மாவட்டம்:** ஆந்திர மாநிலத்தை சேர்ந்த கிருஷ்ணா(40), சிறைகைதியான இவருக்கும் ஆயுள் தண்டனை கைதியான ஆதித்யாகமல்(26) இருவருக்கும் சிறையில் நடந்த தகராறில் ஆதித்யாகமல் கம்பியால் தாக்கியதில் கிருஷ்ணா கொலை. | சிறைச்சாலை வன்முறை | தினமலர் |
| 310. | 5.2.2010 | **திண்டுக்கல் மாவட்டம்:** ஆத்தூர் அருகே உள்ள செம்பமலைப்பட்டியை சேர்ந்த ஆறுமுகம்(39) வேனை திருடியதாக ஒட்டன்சத்திரம் போலீசார் பொய் வழக்கு போட்டு 10 நாட்கள் காவல் நிலையத்தில் சித்திரவதை செய்ததாக நீதிமன்றத்தில் புகார். | காவல் நிலைய சித்திரவதை | தினதந்தி |
| 311. | 5.2.2010 | **விருதுநகர் மாவட்டம்:** ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே உள்ள குன்னூர் பகுதியில் மணல் கடத்தல் தொடர்பாக ஆய்வாளர் வாகன சோதனை. டிரைவர் ஆனந்தன் டிராக்டரை | மணல் கடத்தல் | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிறுத்தாமல் ஆய்வாளர் மீது ஏற்றி கொல்ல முயற்சி செய்ததாக புகார். | | |
| 312. | 5.2.2010 | **திருச்சி மாவட்டம்:** துறையூர் சிங்காளந்தபுரத்தை சேர்ந்த அசோக்குமார் மீது பொய் வழக்கு போடாமல் இருக்க துறையூர் இன்ஸ்பெக்டர் காந்தி ரூ. 20 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக புகார். | காவல்நிலைய வன்முறை | தினத்தந்தி |
| 313. | 5.2.2010 | **தேனி மாவட்டம்:** வருசநாட்டை சேர்ந்த முருகன் மனைவி காளீஸ்வரி (35) மகள் பிரவீணா, கடன் தொல்லையால் மனைவி மகளுக்கு விஷம் கொடுத்து கொல்ல முயன்றதாக முருகன் மீது புகார். | பெண்கள் மீதான வன்முறை கந்துவட்டி கொடுமை | தினகரன் |
| 314. | 5.2.2010 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசியில் ஊராட்சி ஒன்றிய ஆணையராக பணிபுரிபவர் இமானுவேல் அருள்ராஜ் செல்வரத்தினம்(53), இவர் பணிநேரத்தில் மதுக்கடைக்கு அரசு ஜீப்பில் சென்று மது வாங்கியதாக புகார். | ----- | தினகரன் |
| 315. | 5.2.2010 | **வேலூர் மாவட்டம்:** சோளிங்கர் கொண்டபாளையம் பகுதியில் நரிக்குறவர் காலனி பகுதிக்கு செல்லும் வழியை ஆதிக்க இந்துக்கள் அராஜகம் செய்து வீடுகளை கட்டி உள்ளதாக புகார். | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 316. | 5.2.2010 | **தேனி மாவட்டம்:** கம்பம் அருகே உள்ள க.புதுப்பட்டி கிராமத்தை சேர்ந்த பாண்டி(44) மனைவி மரியாள்(40), கணவன் மனைவி தகராறில் மண்வெட்டியால் மனைவியை அடித்துக் கொன்றதாக பாண்டி கைது. | பெண்கள் மீதான வன்முறை | மாலைமலர் |
| 317. | 5.2.2010 | **சிவகங்கை மாவட்டம்:** காளையார் கோவில் போலீஸ் சரகம் இத்திக்குடியை சேர்ந்த ஜெயராமன்(45) மனைவி சின்னப்பொன்னு, கணவன் மனைவி தகராறில் மனைவியின் நடத்தையில் சந்தேகப்பட்டு கொலை செய்ததாக ஜெயராமன் கைது. | பெண்கள் மீதான வன்முறை | மாலைமலர் |
| 318. | 5.2.2010 | **சென்னை மாவட்டம்:** வியாசர்பாடி எம்.கே.பி.நகர் புதுநகரைச் சேர்ந்த கார்த்திக் மஞ்சுளா(19), இருவரும் காதலித்து திருமணம் செய்து கொண்டனர். இந்நிலையில் மஞ்சுளாவைக் கடத்தியதாக புகார். கொடுத்தும் போலீசார் நடவடிக்கை எடுக்க தாமதம். | காவல் நிலைய வன்முறை | மாலைமலர் |
| 319. | 5.2.2010 | **தேனி மாவட்டம்:** கம்பம் ஆர்.ஆர் மில் பின்புறம் உள்ள எல்லப் ரோட்டைச் சேர்ந்த ராஜு மகள் தமிழரசியை அதே ஊரைச் சேர்ந்த முகமது ஜின்னா, தவுசிக், இருவரும் கடத்த முயன்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்முரசு |
| 320. | 5.2.2010 | **தேனி மாவட்டம்:** சின்னமனூர் வ.உ.சி. நகரை சேர்ந்த காளிமுத்து மகள் ராஜேஸ்வரியை(21) காணவில்லை என | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்முரசு |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | காளிமுத்து புகார். | | |
| 321. | 5.2.2010 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** போச்சம்பள்ளி, தளிகப்பட்டி தென்பெண்னை ஆற்றில் அரசு அனுமதி இன்றி மணல் கடத்தல் டிராக்டர் பறிமுதல். | மணல் கடத்தல் | தினகரன் |
| 322. | 5.2.2010 | **தர்மபுரி மாவட்டம்:** பாப்பிரெட்டிபட்டி தாலுக்கா, பையர் நத்தம் அருகே மணல் கடத்தல். டிராக்டர் பறிமுதல். | மணல் கடத்தல் | தினகரன் |
| 323. | 5.2.2010 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** வேலம்பட்டி சேர்ந்த வெற்றிவேல் மனைவி அம்பிகா கூடுதல் வரதட்சணைக் கேட்டு கணவர் துன்புறுத்துவதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 324. | 5.2.2010 | **தர்மபுரி மாவட்டம்:** கொல்லஅள்ளி பருத்தி நத்தம் கிராமத்தை சேர்ந்த ராமன் மனைவி சரஸ்வதி(29) வேலை வாங்கி தருவதாகக் கூறி 41/2லட்சம், 20 பவுன் நகையை வாங்கி ராஜராஜசோழன் ஏமாற்றியதோடு, மிரட்டல். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 325. | 5.2.2010 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** வேப்பனபள்ளி அடுத்த கரியசத்திரம கிராமம் வெங்கடேசன் மனைவி சாந்தா. கணவன் மனைவி குடும்பத் தகராறில் சாந்தா கிணற்றில் விழுந்து தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 326. | 5.2.2010 | **தர்மபுரி மாவட்டம்:** மாரண்டஅள்ளி பானையன் கொட்டாய் சேர்ந்த முனியப்பன் மனைவி முனியம்மாள்(25) கணவன் மனைவி குடும்ப தகராறில் முனியம்மாள் தீக்குளித்து தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை | CHRM |
| 327. | 5.2.2010 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** ராயக்கோட்டை பள்ளி சஜ்ஜலப்பள்ளியைச் சேர்ந்த கோவிந்தசாமி மகள் – +2 மாணவி. அதே ஊரைச் சேர்ந்த தூர்வாசன் வினோத்குமார், கடத்தியதாக கோவிந்தசாமி புகார். | பெண்கள் மீதான வன்முறை | CHRM |
| 328. | 5.2.2010 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** போச்சம்பள்ளி தளிகப்பட்டியைச் சேர்ந்த ராமன் மகள் தங்கம்(17) தனது மகளை அதே ஊரைச் சேர்ந்த ராம்குமார்(21) கடத்தி சென்றதாக ராமன் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 329. | 6.2.2010 | **இராமநாதபுரம் மாவட்டம்:** ராமேஸ்வரம் கோவில் அருகே 66 வயது மூதாட்டியை விட்டு சென்ற மகன். விசாரித்ததில் தன் பெயர் சாவித்திரி என்றும் மகன் ராஜேந்திரன் மதுரை காந்தி மண்டபம் அருகே வசிப்பதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 330. | 6.2.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை பாஸ்போர்ட் அலுவலகத்தில் முறைகேடுகளில் ஈடுபட்டதாக உதவி பாஸ்போர்ட் அலுவலர் கீதாபாய், உட்பட உதவியாளர் அன்பழகன், புரோக்கர் இபுராகிம் மீரான் ஆகியோா | லஞ்சம் | தினத்தந்தி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | வீடுகளில் சி.பிஐ அதிரடி சோதனையில் கீதாபாய் வீட்டில் 8 லட்சம் ரொக்கம், 9 லட்சம் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. | | |
| 331. | 6.2.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை சந்தைப்பேட்டை அருகே மினி லாரி மூலம் 45 மூட்டை ரேசன் அரிசி கடத்த முயன்றபோது பறிமுதல். | ரேசன் அரிசி கடத்தல் | தினத்தந்தி |
| 332. | 6.2.2010 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் லத்திராயிருப்பு இலந்தைக் குளத்தைச் சேர்ந்த பானுமதி(23), ஜோதிமணி மானபங்கம் செய்ததாக பானுமதி புகார். ஜோதிமணி சிறையிலடைப்பு. பானுமதிக்கு பிறந்த ஆண் குழந்தை மரணம். வழக்கு நிலுவையில் உள்ளதால் போலீசுக்கு தகவல் கொடுக்கப்பட்டது. வராததால் 12 மணி நேரம் இறந்த குழந்தையுடன் ஆஸ்பத்திரியில் பானுமதி காத்திருப்பு. | காவல் நிலைய வன்முறை | தினமலர் |
| 333. | 6.2.2010 | **திருநெல்வேலி மாவட்டம்:** திருக்குறுங்குடி அருகே உள்ள நம்பித்தலைவன் பட்டயம் கிராமத்தை சேர்ந்த செல்லப்பாண்டி(90) இவர் அரசு லைசென்ஸ் பெற்ற துப்பாக்கி வைத்துள்ளார். இவர் இறந்து விட்டதால் இவரது மகன் தந்தையின் சமாதி முன்பு இவருடன் நெல்லை போலீஸ்காரர் அழகுதம்பியும் துப்பாக்கியால் சேர்ந்து சுட்டதாக புகார். | காவல் நிலைய வன்முறை | தினமலர் |
| 334. | 6.2.2010 | **மதுரை மாவட்டம்:** ஏழுமலை சேர்ந்த மணிகண்டன் (33) மனைவ ஞானமணி(35), கணவா மணிகண்டன் தன்னை அடித்து துன்புறுத்துவதாகவும் வேறு திருமணம் செய்ய போவதாக மிரட்டுவதாகவும் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 335. | 6.2.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரை அருகே சோழவந்தான் காடுபட்டியை சேர்ந்த உக்கிரபாண்டி(40), அரசு மருத்துவமனையில் உயிரிழந்தார். பிரதே பரிசோதனைக்கு உடலை உள்ளே கொண்டு செல்ல ஊழியர் நடராஜன் பணம் கேட்டு உறவினர் மருத்ததால் உடலை பிரேத பரிசோதனை செய்ய நடராஜன் மறுத்ததாக புகார். | மருத்துவர் அலட்சியம் | தமிழ்முரசு |
| 336. | 6.2.2010 | **தேனி மாவட்டம்:** தேனி அருகே கொடுவிலார்பட்டி வடக்கு தெருவை சேர்ந்த மனோகரன்(27) மனைவி பஞ்சவர்ணம்(27) மனோகரன் பக்கத்து வீட்டை சேர்ந்த ராதா என்ற மாணவியுடன் மாயமாகி விட்டதாகவும் கணவரை கண்டுபிடித்து தருமாறு பஞ்சவர்ணம் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்முரசு |
| 337. | 6.2.2010 | **இராமநாதபுரம் மாவட்டம்:** கடலாடி அருகே உள்ள பனைக்குளத்தை சேர்ந்த கண்ணபிரான் மனைவி பஞ்சவர்ணம், கணவர் | பெண்கள் மீதான வன்முறை | மாலைமுரசு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மற்றும் அவரது குடும்பத்தார் கூடுதல் வரதட்சணைக் கேட்டுத் துன்புறுத்துவதாக புகார். | | |
| 338. | 6.2.2010 | **இராமநாதபுரம் மாவட்டம்:** அருப்புகோட்டை நகராட்சியில் துப்புரவு தொழிலாளியாக பணிபுரிந்து வருபவர் பாப்பன்(45), வாங்கிய பணத்தை பாப்பன் திருப்பி கொடுக்காததால் கவுன்சிலர் செல்வி அடியாட்களுடன் சென்று பாப்பனை பலமணிநேரம் தாக்கியதில் படுகாயம். பாப்பன் அரசு மருத்துவமனையில் சிகிச்சை. | கந்துவட்டி கொடுமை தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |

மக்கள் கண்காணிப்பகம்